திருவேங்கடம் பேரூராட்சிப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 72. திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா திருவேங்கடம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்க அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா

(ஆ) ஆமெனில் அப்பணி எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் ; (அ) திருவேங்கடம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்தின் கோவில்பட்டி உதவி நிர்வாக பொறியாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் ரூ, 2,50,000/- கடன் பெற்று சுலபத் தவணை முறையில் வட்டியுடன் செலுத்த திருவேங்கடம் பேரூராட்சி தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் கோவில்பட்டி கோட்ட வளர்ச்சி அலுவலர் அனுப்பியுள்ள கோரிக்கை தற்போது ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு பொ. உத்திராபதி ; பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே சங்கரன் கோவிலுக்குக் குடிநீர் வழங்குவது சம்பந்தமாக பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள் முடிவடையும், எப்போது வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் பதில் சொல்லக்கூடிய நிலைமை இல்லை.

பெரியகொடிவேரி குடிநீர் திட்டம்

*வினா எண் 73 திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் பெரியகொடிவேரி குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகிறதா?

(ஆ) இத் திட்ட வேலைகள் எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; (அ) ஆம்.

(ஆ) இத் திட்ட பணிகள் 1982 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும் என